இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 285 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 13 – புதன்கிழமை 27 மே 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 285: Thiruvalluvar Year - 2057 - Vaikasi 13 - Wednesday 27 May 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டில் விஜய் ஆட்சியில் ‘குதிரை வேகத்தில்’ நடக்கிறது, ‘குதிரை பேரம்’!

# ‘தூய சக்தி’ என்று தம்பட்டம் அடித்தவர்கள், ‘துயர சக்தி’ என அம்பலப்பட்டிருக்கிறார்கள்!

## வலைதளப் பதிவில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, மே 27-

தமிழ்நாட்டில், நேற்று முன்தினம் - அ.தி.மு.க.வின் ஒரு பிரிவைச் சேர்ந்த 3 எம்.எல்.ஏ.க்கள், அக்கட்சியில் இருந்து விலகுவதாக பேரவைத் தலைவரிடம் ‘விலகல் கடிதம்’ அளித்து விட்டு, அதனை அடுத்த நிகழ்வாக - தலைமைச் செயலகத்திலேயே அமைச்சர் ஒருவர் முன்னிலையில் ‘தமிழக வெற்றிக் கழகத்தில்’ இணைந்தனர்.

அரசியல் அரங்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள இந்நிகழ்வு, தமிழ்நாட்டு மக்கள் அருவருக்கத்தக்க அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றால், அது மிகையல்ல!

த.வெ.க.வின் இந்த தகிடுதத்த அரசியல் நகர்வைக் கண்டித்து, நேற்று முன்தினம் மாலை சமூக வலைதளத்தில் பதிவிட்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தமிழ்நாட்டில் விஜய் ஆட்சியில் ‘குதிரை வேகத்தில்’ நடக்கிறது ‘குதிரை பேரம்’ என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள், “தூய சக்தி” என்று சுய தம்பட்டம் அடித்தவர்கள், “துயரசக்தி” என அம்பலப்பட்டிருக்கிறார்கள்- என்றும் சாடியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

அ.தி.மு.க. பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் இருந்த அ.தி.மு.க., இ.பி.எஸ். அணி, சி.வி. சண்முகம் - எஸ்.பி. வேலுமணி அணி என இரண்டாக உடைந்தது.

இந்நிலையில், சி.வி.சண்முகம் - எஸ்.பி.வேலுமணி தரப்பு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களான மதுராந்தகம் மரகதம் குமரவேல், பெருந்துறை ஜெயக்குமார் மற்றும் தாராபுரம் சத்ய பாமா ஆகியோர் தங்கள் சட்டப்பேரவை உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்துள்ளனர். இதற்கு எதிர்க்கட்சிகள் தரப்பில் இருந்து பல்வேறு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

தமிழ்நாடு இதுகாறும் கண்டிராத இந்த அநாகரிக அரசியலைக் கண்டித்து



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**‘குதிரை வேக’த்தில் நடக்கும் ‘குதிரை பேரம்’!**

**Scene 1:** பெரும்பான்மை இல்லாத நிலையில், தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்களிடம் ஆதரவு கேட்பது.

**Scene 2:** நம்பிக்கை வாக்கெடுப்பில் அ.தி.மு.க.வின் ஒரு அணியை ஆதரவாக வாக்களிக்க விலை பேசுவது. அ.ம.மு.க. உறுப்பினரையும் கொசுறு வாங்குவது.

**Scene 3:** அ.தி.மு.க. உறுப்பினர்கள் சிலரைப் பதவி விலகச் செய்து, தலைமைச் செயலகத்தில் வைத்தே தன் கட்சியில் இணைப்பது.

இந்த கண்றாவிக் காட்சிகளைப் பார்க்கத்தான் மக்கள் உங்களுக்கு வாக்களித்தார்களா?

‘தூயசக்தி’ என்று சுயதம்பட்டம் அடித்தவர்கள், ‘துயரசக்தி’ என அம்பலப்பட்டிருக்கிறார்கள்.

**காங்கிரசின் போலி பா.ஜ.க. எதிர்ப்பு பல்லிளிக்கிறது!**

NDA ஆதரவைக் கோராமல் இருந்தால் மட்டுமே ஆதரவு எனச் சொல்லிக் கடிதம் அளித்துவிட்டு, இப்போது நடக்கும் காட்சிகளை அமைச்சரவையில் இருந்து ரசித்து விசிலடிக்கும் காங்கிரசின் போலி பா.ஜ.க. எதிர்ப்பும் பல்லிளிக்கிறது!

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## கடந்த 15 நாட்களில் 25 கொலைகள், 4 இரட்டைக் கொலைகள், 19 பாலியல் குற்றங்கள்!

# வீரவசனம் பேசிய முதல்வர் வாய்திறக்க மறுப்பது ஏன்?

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, மே 27 -**

**“கடந்த 15 நாட்களில் 25 கொலைகள், 4 இரட்டைக் கொலைகள், 19 பாலியல் குற்றங்கள் என தொடர் சம்பவங்கள் நடைபெற்று வரும்போது தேர்தலுக்கு முன் வீரவசனம் பேசிய முதல்வர் இப்போது வாய்திறக்க மறுப்பது ஏன்?” என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாட்டில் த.வெ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைந்த பிறகு, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கஞ்சா கடத்தல் உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டு வருகிறது.

ஏன் தான் இவர்களை தேர்ந்தெடுத்தோமோ என்று மக்கள் வருத்தப்படக்கூடிய வகையில் நேற்று கூட மதுரையில் 17 வயது சிறுவன் ஒருவன் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளான்.

கோவை சூலூர் 10 வயது சிறுமி கொல்லப்பட்டு, இறந்த உடலை பெற்ற தாய்க்கும் தெரிவிக்காமல் எரித்த கொடுமையும் நடந்துள்ளது.

வந்தவாசியில் 14 வயது சிறுமி கடத்தப்பட்டு கூட்டுப் பாலியல் வன்கொடுமை நடைபெற்ற அநியாயம்,

இதுமட்டுமின்றி எங்கு பார்த்தாலும் கொள்ளைச் சம்பவங்கள் அரங்



கேறி, அமைதியாக இருந்தத் தமிழ்நாட்டில் இப்படியொரு நிலையா என்று கேட்கிற அளவில் தற்போதைய சூழல் நிலவுகிறது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இதுதான் த.வெ.க. சொன்ன மாற்றமா என்று கேட்டுள்ளார்.

இந்நிலையில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட் டிருப்ப தாவது :-

**தமிழ்நாட்டில் கடந்த 15 நாட்களில் 25 கொலைகள், 4 இரட்டைக் கொலைகள், 19 பாலியல் குற்றங்கள் என செய்திகளில் வந்த சம்பவங்கள் மட்டுமே இவை.**

**மாற்றம், மாற்றம் என்று சொன்னவர்களின் ஆட்சியில், தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு மாறி இருப்பதற்கு இந்த சம்பவங்களே சாட்சி.**

**கோவை சூலூர் சிறுமிக்கு நடந்த கொடுமையின் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் விழுப்புரம் மாவட்டத்தில் மற்றொரு சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை நடந்திருக்கிறது.**

**சூலூர் சிறுமியின் தாய்க்குச் சொல்லாமல் அவசரகதியில் உடல் எரிக்கப்பட்டிருக்கிறது.**

**மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே 17 வயது சிறுவன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறான்.**

**மேலும், கோவையில் ஒரு இளம்பெண்ணின் வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டு இருக்கிறது.**

**முதலமைச்சரின் சொந்த தொகுதியான பெரம்பூரில் போதைக் கும்பல் ஒன்று 13 வாகனங்களின் கண்ணாடிகளை உடைத்து அட்டூழியம் செய்துள்ளது.**

**மாண்புமிகு முதல்வர் அவர்களே,**

**இது தமிழ்நாடா, உத்தரப்பிரதேசமா?**

**எங்கே போனது உங்க சிங்கப் பெண் அதிரடிப் படை?**

**தேர்தலுக்கு முன்பு வீர வசனங்களை பேசிய முதலமைச்சர் இப்போது ஏன் வாய் திறக்க மறுக்கிறார்?**

**அதிகரிக்கும் குற்றச் சம்பவங்களால் பொதுமக்கள் அச்சத்தில் தவிக்கும் போது, இன்று காலை கண்துடைப்புக்காக காவல்துறை அதிகாரிகள் கூட்டத்தை நடத்தி பொத்தாம் பொதுவாக அறிக்கை விடுவதை ஏற்க முடியாது.**

**நிலைமையின் தீவிரத்தை முதலில் அரசு உணர வேண்டும்.**

**பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களை தடுக்க, முதலமைச்சர் ஆக்கப்பூர்வமாக என்ன செய்யப் போகிறார் என்ற தமிழ்நாட்டின் கேள்விக்கு அவர் நேரடியாக பதில் சொல்லி ஆக வேண்டும்.**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

